Previous Date of examination :

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**திருவாரூர்**

# CC No.25/2020

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ..சா. 60-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு. ராஜா | வயது | 34 /2022 |
| தகப்பனார் பெயர் | ராஜேந்திரன் | ஜாதி | |
| தொழில் | முதல் நிலை காவலர் | மதம் | |
| ஊர் | திருவாரூர் | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது திருவாரூர் போக்குவரத்து காவல் பிரிவில் முதல்நிலை காவலராக பணிபுரிந்து வருகிறேன். நான் 11.04.2018 ம் தேதி முதல் திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி அம்மா அவர்களுக்கு தனிப்பட்ட காவல் பொறுப்பாளராக பணியில் இருந்தபோது 01.03.2019 மதியம் 2.00 மணியளவில் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி நீதிமன்றத்தில் அலுவலக உதவியாளராக வேலை பார்த்தார். நான் நீதிமன்ற அறைக்கு வெளியே நின்றுக்கொண்டிருந்தேன். அப்போது கோவிந்தலெட்சுமி பதட்டத்துடன் ஓடிவந்து நீதிபதி அம்மாவை பார்க்கவேண்டும் என்று சொன்னார். நான் அம்மா சாப்பிட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சிரஸ்தாரை அழைத்துக்கொண்டு வந்து பாருங்கள் என்று சொன்னேன். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி மீது மண்ணெண்ணெய் வாடை வந்தது. பின்னர் சிரஸ்தாரை அழைத்துக்கொண்டு 2 வது எதிரி வந்தார். நீதிபதி அம்மா அவரது அறையை விட்டு வெளியே வந்து பார்த்தார். அப்போது 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி நீதிபதி அம்மாவின் காலில் விழுந்தார். நீதிபதி அம்மா சிரஸ்தாரிடம் என்னவென்று விசாரியுங்கள் என்று சொன்னார். அதன்பிறகு நீதிமன்ற பணியாளர்கள் கோவிந்தலெட்சுமியை அழைத்துக்கொண்டு போனார்கள். நீதிமன்ற ஊழியர்களும் இருந்தார்கள். சக்திவேல்என்பவர் டார்சர் செய்வதாக சொல்லி கோவிந்தலெட்சுமி அழுதார். என்னை மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து விசாரணை செய்தார்கள். நடந்த

விபரங்களை சொன்னேன். தாலுக்கா காவல் நிலையத்திற்கு தகவல் சொல்லி தாலுக்கா காவல் நிலையத்திலிருந்து வந்தார்கள். எதனால் மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு ஓடி வந்தார் என்று விசாரித்தபோது கோவிந்தலெட்சுமி நீதிபதியிடம் அலுவலக உதவியாளராக இருப்பதால் வேலை வாங்கி தருவதாக சொல்லி பணம் வாங்கி ஏமாற்றியுள்ளதாகவும், அதனால் மண்ணெண்ணெய்யை ஊற்றிக்கொண்டு வந்தார் என்று சொன்னார்கள்.

கு.வி. (1 வது எதிரி தரப்பில்)

நான் 11.04.2018 முதல் டிசம்பர் 2019 ம் வருடம் வரை திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி அம்மா அவர்களுக்கு பாதுகாவலராக பணிபுரிந்தேன். எனது பணி என்னவென்றால் நீதிபதி அம்மாவிற்கு நீதிமன்றத்திலும், நீதிமன்றத்திற்கு வெளியேயும் பாதுகாப்பு கொடுப்பதாகும். நீதிபதி அம்மா வெளியே சென்றால் அவரது காரில் நானும் போவேன் என்றால் சரிதான். நீதிபதி அம்மா வீட்டிலும் பாதுகாவல் பணி செய்தேன் என்றால் சரிதான். இரவு காவல்பணிக்கு தனியாக ஆட்கள் உள்ளார்கள். நீதிபதி அம்மா வீட்டிற்கு அவரை பார்க்க வரும் நபர்கள் யார் என்று நாங்கள் தனியாக பதிவேட்டில் பதிவு செய்வோமா என்றால் அவ்வாறு நீதிபதி அம்மாவை யாரும் பார்க்க வரமாட்டார்கள். 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி நீதிபதி அம்மா வீட்டிற்கு நான் இருக்கும்போது வந்துள்ளாரா என்றால் அவர் ஓ.ஏ-வாக இருப்பதால் வருவார். நான் கோவிந்தலெட்சுமி மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டதை நான் பார்க்கவில்லை. அவர் மீது மண்ணெண்ணெய் வாடை வீசியது. கோவிந்தலெட்சுமி நீதிபதி அம்மாவை பார்க்க வேண்டும் என்று சொன்னபோது நான் தடுத்தேன் என்றால் சரிதான். நான் தடுத்தபோது கோவிந்தலெட்சுமி என்ன சொன்னார் என்றால் நான் அம்மாவை பார்க்க வேண்டும், பார்க்க வேண்டும் என்று சொன்னார். நான் பதட்டத்துடன் நிற்கிறீர்கள் சிரஸ்தாரை போய் அழைத்துக்கொண்டு வாருங்கள் என்று சொன்னேன். அசம்பாவிதம் எதுவும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக நான் சிரஸ்தாரை அழைத்து வர சொன்னேன் என்றால் சரிதான். ஆஜர் 1வது எதிரி மற்றும் அவருடன் சுமார் 10 பேர் அங்கு இருந்தார்களா என்றால் நான் நின்றுக்கொண்டிருந்த இடத்திற்கு அவர்கள் வரவில்லை. சிரஸ்தார் கோவிந்தலெட்சுமியை அழைத்து தனியாக சென்று விசாரித்தார். என் முன்னிலையில் விசாரிக்கவில்லை. அதனால் கோவிந்தலெட்சுமி என்ன சொன்னார் என்று எனக்கு தெரியாது. கோவிந்தலெட்சுமி நீதிபதி அம்மா காலில் விழுந்து 1 வது எதிரி

சக்திவேல் டார்ச்சர் செய்வதாக கதறி அழுதார். என்ன டார்ச்சர் என்று கோவிந்தலெட்சுமி சொல்லவில்லை. சிரஸ்தாரை அழைத்து அம்மா விசாரிக்க சொன்னார். அன்றைய தேதியில் வழக்கு எதுவும் போட்டார்களா என்று எனக்கு தெரியாது. கோவிந்தலெட்சுமி நீதிமன்றத்திற்கு மண்ணெண்ணெய் ஊற்றிக்கொண்டு வந்தது சம்பந்தமாக நீதிபதி அம்மா உயர்நீதிமன்றத்திற்கு தகவல் தெரிவித்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. தாலுக்கா போலிசார் அன்றைய தினமே என்னை விசாரித்தார்கள். நான் எழுத்துபூர்வமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் மாவட்ட நீதிமன்றத்திலிருந்து என்னை பணியிடைமாற்றம் செய்ய வேண்டும் என மனு எதுவும் கொடுத்துள்ளேனா என்றால் இல்லை. நான் பணிமாற்றம் பெற்று சென்ற பின்னர் போலிசார் விசாரிக்கவில்லை. நான் நீதிபதியிடம் பணியில் இருந்தபோது விசாரித்தார்கள். நடந்த சம்பவத்தை முழுமையாக சொல்லாமல் சிலவற்றை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

நான் 11.04.2018 ம் தேதி பணியில் சேர்ந்தது ஆயுதபடை உதவிஆய்வாளரின் உத்தரவின்படி என்றால் சரிதான். அந்த உத்தரவு எழுத்துமூலமான உத்தரவாகும். எனது பணிப்பதிவேடு, வருகை பதிவேடு ஆகியவை ஆயுத படை பிரிவில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். மாவட்ட குற்றப்பிரிவில் என்னை விசாரணை அதிகாரி உதவி ஆய்வாளரின் எழுத்துமூலமான உத்தரவு, எனது பணிப்பதிவேடு, வருகை பதிவேடு ஆகியவற்றை ஆய்வு செய்தாரா என்று எனக்கு தெரியவில்லை. 11.04.2018 ம் தேதி முதல் டிசம்பர் 2019 ம் தேதி வரை நான் திருவாரூர் மாவட்ட முதன்மை நீதிபதி அம்மா அவர்களுக்கு பாதுகாப்பாளராக வேலை பார்த்ததாக நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் எனது வருகைபதிவேடு,பணிப்பதிவேடு, உதவி ஆய்வாளர் உத்தரவு ஆகியவற்றை பார்வையிட்டார் என்றும், அதில் நான் 11.04.2018 ம் தேதி முதல் டிசம்பர் 2019 வரையிலும் குறிப்பாக 01.03.2019 ம் தேதியும் நான் வேலை செய்யவில்லை என தெரியவந்ததால் அந்த ஆவணங்களை கைப்பற்றவில்லை என்றும், அதனால்தான் ஆய்வாளர் ஆய்வு செய்தாரா என்று எனக்கு தெரியவில்லை என மழுப்பளாக பதில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 01.03.2019 ம் தேதி கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு செயல்பட்டில் இருந்தது என்றால் சரிதான். சாட்சி மீண்டும் அப்போதுதான் சி.சி.டி. கேமரா பொருத்தும் பணி நடைபெற்றுக்கொண்டு இருந்ததாகவும், அதனால் செயல்பாட்டில் இருந்ததா என்று

தனக்கு தெரியவில்லை என்று கூறுகிறார். 01.03.2019ம் தேதி 2வது எதிரி நீதிபதி அம்மாவை பார்க்க வரவில்லை என்றும், அவரிடம் மண்ணெண்ணெய் வாடை வீசியதாக பொய்யாக சொல்கிறேன் என்றும், நீதிபதி அம்மா வெளியில் வந்தபோது 2வது எதிரி காலில் விழுந்து கதறியதாகவும், சிரஸ்தாரை அழைத்து நீதிபதி அம்மா 2வது எதிரியை அழைத்து விசாரணை செய்ய சொன்னதாகவும், நான் சொல்லும் விபரங்கள் பொய் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்தவித நிகழ்வும் நடைபெறவில்லை என்றம், அதனால்தான் கண்காணிப்பு கேமராவிலும் எந்த பதிவும் இல்லை என்றும், தற்போது போலிசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியமளிப்பதால் முன்னுக்குபின் முரணாக கண்காணிப்பு கேமரா தொடர்பாக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க 2வது எதிரி நீதிபதி அம்மா வீட்டிற்கு வருவார் என்றும், 1வது எதிரி மற்றும் 10 நபர் அங்கு இருந்தார்களா என்றால் நான் நின்றுக்கொண்டிருந்த இடத்திற்கு வரவில்லை என்றும், போலிசார் விசாரணையில் சொல்லாத விபரத்தை 1வது எதிரியின் குறுக்கு விசாரணையில்சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல.

Previous Date of examination :

நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,

திருவாரூர்

**CC No.25/2020**

2022-ம் ஆண்டு ஜூலை மாதம் 14 -ம் நாள் குற்றமுறையீட்டாளர் தரப்பில் சாட்சி அ.சா.61-ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | புகழேந்திரன் | வயது | 52/2022 |
| தகப்பனார் பெயர் | தங்கரெத்தினம் | ஜாதி | |
| தொழில் | தனியார் வேலை | மதம் | |
| ஊர் | தேனி | தாலுக்கா | |

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது தேனியில் வசித்து கொண்டு சொட்டு நீர் பாசன ஏஜென்ஸி வைத்து நடத்தி வருகிறேன். ஆஜர் எதிரிகள் இருவரையும் தெரியும். 2015 ம் வருடம் எனது மனைவிக்கு உடல்நிலை சரியில்லை என்று ஈரோடு கல்பனா மருத்துவமனையில் சேர்த்திருந்தேன். அங்கு திருவாரூரை சேர்ந்தவர் சாந்தி என்பவரும் சிகிச்சைபெற்றார். அவர் மூலம் 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியை தெரியும். கோவிந்தலெட்சுமி சக்திவேல் வீட்டில் குடியிருந்து வந்ததால் 1வது எதிரி சக்திவேலையும் தெரியும். எனக்கு பணம் தேவைப்பட்டதால் 2017 ம் வருடம் சாந்தி மூலம் கோவிந்தலெட்சுமியிடம் ரூ.6,50,000/- பணம் கடன் வாங்கியிருந்தேன். மேலும் எனக்கு பணம் தேவைப்பட்டதால் சக்திவேலிடம் பணம் கேட்டபோது 07.02.2018 ம் வருடம் எனக்கு சக்திவேல் அவரது வங்கி கணக்கில் எனக்கு ரூ.5,00,000/- கடனாக கொடுத்தார். மோடி ஸ்கீம் மூலம் அவருக்கு லோன் கிடைத்ததாக சொன்னார். நான் வேறு யாரிடமும் பணம் வாங்கவில்லை. திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து என்னை விசாரித்தார்கள். அப்போதுதான் சக்திவேலும், கோவிந்தலெட்சுமியும் வேலை வாங்கி தருவதாக கூறி பலநபர்களிடம் பணம் வாங்கியுள்ளதாக சொன்னார்கள். நான் எவ்வளவு கடன் வாங்கியுள்ள விபரத்தை கேட்டார்கள். அந்த விபரத்தை போலிசாரிடம் சொன்னேன்.

**கு.வி. (1வது எதிரி தரப்பில்)**

நான் 1வது எதிரியிடம் கடனாக ரூ.5 லட்சம் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் சக்திவேல் வீட்டிற்கு 2, 3 முறை போயிருக்கிறேன். 2 வது எதிரியையும் நான் அங்கு பார்த்துள்ளேன். 2 வது எதிரி அங்கு குடியிருக்கும் விபரம் எனக்கு தெரியும். நான் தெரியாத நபரிடம் பணம் கேட்டேன் என்றால் சக்திவேல் கோவிந்தலெட்சுமி மூலம் பழக்கமான நபர், அதனால் பணம் கேட்டேன். 1வது எதிரிக்கு பிரதமர் மோடி திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மை சம்பந்தமாக ரூ.5 லட்சம் கடன் கிடைத்தது என்றால் சரிதான்.அந்த தொகைதான் எனக்கு கடனாக கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தொகையை வங்கி கணக்குமூலம் எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அவர் கையில் பணம் இல்லாததால்தான்அவருக்கு வந்த லோன் தொகையை எனக்கு கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த தொகையை திரும்ப கொடுத்துவிடுவேன் என்றால் சரிதான்.

**கு.வி. (2 வது எதிரி தரப்பில்)**

1வது எதிரியினுடைய வங்கி கணக்கை பார்வையிட்டு அவரது வங்கி கணக்கிலிருந்து எனது வங்கி கணக்கிற்கு பணம் பரிவர்த்தனை நடைபெற்று இருந்ததால் திருவாரூர் மாவட்ட குற்றப்பிரிவிலிருந்து என்னை அழைத்து விசாரணை செய்தார்கள் என்றால் சரிதான். 1வது எதிரி பல நபர்களிடமிருந்து வேலை வாங்கி தருவதாக கூறி வாங்கிய தொகையைத்தான் எனக்கு கடனாக வழங்கினார் என்று சொன்னால் சரியல்ல. போலிசார் விசாரணை செய்தபோது மோடி திட்டத்தின் கீழ் 1வது எதிரிக்கு லோன் கிடைத்து அந்த பணத்தை எனக்கு கடனாக கொடுத்ததாக சொல்லும் விபரத்தை நான் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் அவ்வாறு சொல்லவில்லை என்றும், தற்போது முதன்முறையாக நீதிமன்றத்தில் முதல் விசாரணையிலும் 1வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணையிலும், 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக கூறுகிறேன் என்றால் சரியல்ல. நான் 2017 ம் வருடம் சாந்தி என்பவர் மூலம் ரூ.6,50,000/- 2 வது எதிரி கோவிந்தலெட்சுமியிடம் வாங்கிய விபரத்தை போலிசார் விசாரித்தபோது சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன். அந்த விபரமும் 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல்முறையாக நீதிமன்றத்தில் சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிசார் என்னை விசாரித்தபோது நான் சக்திவேல் வீட்டிற்கு சென்ற விபரத்தையும் அங்கு 2 வது எதிரி கோவிந்தலெட்சுமி குடியிருப்பது தெரியும் என்ற விபரத்தையும் சொன்னேனா என்றால் சொல்லியுள்ளேன்.அவ்வாறு நான்

சொல்லவில்லை என்றும் 1வது எதிரி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் கிடையாது. 1வது எதிரி எனக்கு கடனான கொடுத்த தொகை ரூ.5 லட்சம்மோசடியாக அவருக்கு கிடைத்த தொகை என்பதால் என்னையும் வழக்கில் சேர்ப்பதாக காவல் துறையினர் மிரட்டி 2 வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியமளிக்குமாறு கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 வது எதிரியை தொடர்புபடுத்தி சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 1வது எதிரி கொடுத்த ரூ.5 லட்சத்தை திருப்பி தர தேவையில்லை என எனக்கு ஆசை வார்த்தை காட்டி 2 வது எதிரியை தொடர்பு படுத்தி சாட்சியமளிக்குமாறு சொல்லியதால் 2 வது எதிரியை தொடர்புபடுத்தி 1வது எதிரியின் குறுக்கு விசாரணையில் 2 வது எதிரிக்கு எதிராக சாட்சியமளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரியை தெரியும் என்று வழக்கிற்காக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.